# <u>சுருக்கம்</u>

மிகை மின்சார நுகர்வு – தவிர்த்தல் – சாதாரண பல்புகள் (குண்டு பல்புகள் Incandescent Bulbs) பயன்பாட்டினை தடை செய்தல் – ஆணை –வெளியிடப்படுகிறது.

---

எரிசக்தி (சி2)த் துறை

அரசு ஆணை (நிலை) எண்.75 நாள்: 20.08.2010

படிக்க:

<u>ஆணை:–</u>

சாதாரண பல்புகளை பயன்படுத்துவதால் 40w அல்லது 60w அளவு மின்சாரம் செலவாகிறது. இவற்றிற்கு பதிலாக சிறு குழல் விளக்குகள் (Compact Flourescent Lamps (CFL)) பயன்படுத்துவதால் 14w மின்சாரம் மட்டுமே செலவாகிறது. இதனால் சிறு குழல் விளக்குகள் (Compact Flourescent Lamps (CFL)) பயன்படுத்துவதால் மின் நுகர்வு மிகவும் குறையும் நிலை ஏற்படும்.

2. சாதாரண பல்பு (குண்டு பல்பு ICBs) மற்றும் சிறு குழல் விளக்குகளின் மின்நுகர்வு கீழ்கண்டவாறு அமைகிறது:–

| வ. எண் | பெயர் | எண்ணிக்கை | திறன் | நேரம் | கிலோவாட் | மெகாவாட் |
|---|---|---|---|---|---|---|
| 1. | குண்டு பல்பு (Incandescent Bulbs) | 4 கோடி | 60 w | ஒரு மணி | <u>4 கோடிx60w</u><br>1000<br>=24லட்சம்.கி. வா | <u>24 லட்சம் கி.வா</u><br>1000<br>= 2,400 மெ.வா |
| 2. | சிறுகுழல் விளக்குகள் (Compact Flourescent Lamps (CFL)) | 4 கோடி | 14 w | ஒரு மணி | <u>4 கோடிx14w</u><br>1000<br>=5.6.லட்சம் கி.வா | <u>5.6லட்சம் கி.வா</u><br>1000<br>= 560 மெ.வா |

2,400 மெகாவாட் – 560 மெகாவாட் = 1,840 மெகாவாட் (சேமிப்பு)

3. அரசு தீவிர பரிசீலனைக்கு பின்பு, மிகை மின்நுகர்வினை தவிர்ப்பதற்காகவும் அதிக மின் சக்தியை சேமிக்கவும் அரசு துறைகள், பொதுத்துறை நிறுவனங்கள், வாரியங்கள், கூட்டுறவு நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள், அரசுக்கு சொந்தமான உதவிபெறும் கட்டுபாட்டிலுள்ள நிறுவனங்கள் ஆகிவற்றிற்கு சாதாரண பல்புகள் (குண்டு பல்புகள் Incandescent Bulbs) பயன்படுத்துவதற்கு தடைவிதித்து அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பி.டபிள்யு.சி டேவிதார்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
முதன்மைச் செயலர் மற்றும் தலைவர்,
தமிழ்நாடு மின்சார வாரியம், சென்னை–2
அரசு தலைமை மின் ஆய்வாளர், சென்னை–32
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், சென்னை–8
தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி மேம்பாட்டு முகமை, சென்னை–6
தலைமைச் செயலக அனைத்து துறைகள், சென்னை–9
அனைத்து துறை தலைமை அலுவலகங்கள்

<u>நகல்</u>
மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9
மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9
அனைத்துப் பிரிவுகள், எரிசக்தித் துறை, சென்னை–9
இருப்புக் கோப்பு / உபரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

நகல்
மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9
மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9
அனைத்துப் பிரிவுகள், எரிசக்தித் துறை, சென்னை–9
இருப்புக் கோப்பு / உபரி